1978 மார்ச் 10]

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: பேரவைத் தலைவர் அவர்களே, தாயகம் திரும்புகின்றவர்கள் எந்தப் பகுதியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், கூட்டுறவு நூற்பு ஆலைகளில் தற்காலிகமாக பயிற்சியாளராக அமர்த்தப்படுகிறார்கள். பயிற்சி காலம் முடிந்த பிறகு வேலையின் திறமையைப் பார்த்து முன் உரிமை கொடுத்து நிரந்தரமான வேலைகளில் அமர்த்தப்படுகிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. மு. அம்பிகாபதி: பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பாக கூட்டுறவு நூற்பு ஆலைகளில் செய்யப்படுகின்ற ஒப்பந்தங்கள் அமல்படுத்துவதில்லை. மணல்மேடு பஞ்சாலை நிர்வாகத்தைப் பொறுத்தவரையில், அங்கு செய்யப்பட்ட ஒப்பந்தம் அமல் நடத்தப்படாததால் வேலைநிறுத்தம் போன்றவைகள் ஏற்படுகின்றன. ஆகவே, அரசு இதைக் கருத்திற் கொண்டு கூட்டுறவு நூற்பு ஆலைகளில் செய்யப்படுகின்ற ஒப்பந்தங்களை சரியான முறையில் அமல் நடத்துவதற்கு முயற்சி எடுக்குமா?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: 1947-ம் ஆண்டு தொழில் தகராறு சட்டம்-பிரிவு 12 (3)-ன் மேல் இந்த மூலக் கேள்வியில் குறிப்பிட்டுள்ள மணல்மேடு மில்லில் சமரசம் ஏற்பட்டு தொழிலாளர்களுக்கு ஆதரவான ஆணைகளும் அரசு பிறப்பித்துள்ளது. அதில் கூறப்பட்டுள்ள உறுதிமொழிகளில் இன்னின்னவற்றை நிர்வாகம் நிறைவேற்றவில்லை என்றோ, அல்லது நிறைவேற்றுவதற்கு காலதாமதம் ஏற்படுகிறது என்றோ, தொழிலாளர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள வாக்குறுதிகள் நிர்வாகத்தால் மீறப்படுகிறது என்றோ அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்தால், நிர்வாகத்தின் மீது அரசு கடுமையான நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-00)

மரமேறும் தொழிலில் ஈடுபட்டிருந்தோருக்கு உதவி.

*503 வினா—திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு கைத்தறி-பஞ்சாலைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுவிலக்கின் காரணமாக பாதிக்கப்பட்ட மரமேறும் தொழிலாளர்கட்கு ஆண்டுக்கு அரசு காதி போர்டு மூலம் செய்யும் செலவுத் தொகை என்ன?

[1978 மார்ச் 10

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: ஒவ்வொரு ஆண்டும் மதுவிலக்கின் காரணமாகப் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு அரசு காதிபோர்டு மூலமாகச் செலவு எதும் செய்வதில்லை. ஆனால் 1973-ம் ஆண்டில் கள்ளுக்கடைகள் மூடப்பட்டபோது பாதிக்கப் பட்ட 20,300 பனைத்தொழில் வல்லுநர்களுக்கு மொத்தம் 5,03,500 ரூபாய் மானியமாகவும், ரூ. 35,52,500 கடனாகவும் வழங்கப்பட்டது. இதில் தமிழக அரசின் பங்கு ரூ. 1,27,000 மான்யமும், ரூ. 8,88,000 கடனுமாகும். பம்பாய் கதர் கிராமத்தொழில் ஆணைக்குழுவிட மிருந்து பெறப்பட்டு வழங்கப்பட்ட தொகைகள் ரூ. 3,76,500 (மானியம்), ரூ. 26,64,500 (கடன்) ஆகும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் அனுமதியோடு கேள்வி நேரத்தை நீட்டிக்கிறேன்.

திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் நாட்டில் சுமார் 25 இலட்சம் மரமேறும் தொழிலாளர்கள் இந்தத் தொழிலை நம்பியிருந்தார்கள். மது விலக்கினால் இவர்கள் வேலை இழந்துவிட்டார்கள். ரம், விஸ்கி, பீர், ஜின் போன்றவைகளுக்கு லைசென்சு அளித்துச் சாப்பிடலாம் என்ற ஒரு விதிவிலக்கு இருப்பதுபோல், இந்தக் கள்ளுக்கும் விதிவிலக்கு அளித்து அவர்களுடைய வேலைக்குப் பாதுகாப்பு அளிக்க தமிழக அரசு முன்வருமா? மதுவிலக்கு வைத்துக் கொண்டு, அதை அமுல் படுத்த முடியாமல், அவர்களுக்கும் வேலை கிடைக்காமல் இருக்கின்ற நிலைமைகளைப் போக்கும் வகையில் மதுவிலக்கில் கள்ளுக்கு விதி விலக்கு அளிக்க இந்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: பேரவைத் தலைவர் அவர்களே, தவறு செய்வதற்கு விதிவிலக்கு அளிக்கக்கூடிய கொள்கை இந்த அரசுக்கு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். தவறு என்றால் எல்லாமே தவறுதான். அதே நேரத்தில் இந்தத் தொழிலில் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னால், அதற்கு மாற்றுத் தொழில் இன்றைக்கு வழங்கப் பட்டிருக்கிறது. பல்வேறு வகையில் மானியமாகவும், கடனாகவும் கொடுத்து பனைமரத் தொழிலாளர்கள் செயல்பட்டு வருகிறார்கள் என்பதை நான் கூறிக்கொள்கிறேன்.

திரு. கே. கந்தசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, பனை மரத்திலிருந்து இறக்கக்கூடிய கள்ளில் இரும்புத் தாதுச் சத்து, அயர்ன் சப்ஸ்டென்ஸ் அதிகமாக உள்ளது என்று கருதுகிறார்கள்.

1978 மார்ச் 10]

கள் இறக்குவது தடை செய்யப்பட்டிருக்கிறது. அதற்குப் பதிலாக, இந்தப் பனையிலிருந்து வெல்லம், கருப்பட்டி போன்றவைகள் இதுபோன்ற மூலப்பொருள்கள் செய்வதன் மூலம், இந்தத் தொழிலை நடைமுறைக்குக் கொண்டுவருவதன் மூலம், இதனல் வேலை இழந்தவர்களுக்குத் திரும்பவும் வேலை கொடுக்கும் வகையில் இந்த அரசு ஒரு கொள்கையை அறிவிக்குமா? அம்மாதிரி ஒரு கொள்கையை அமைத்து அதைப் பரப்புவதற்கு, அவர்களைப் பாது காக்கின்ற அளவிற்கு ஒரு முயற்சி எடுக்க இந்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தொழிலிலே ஈடுபட்டிருக்கின்ற தொழி லாளர்கள் தொடர்ந்து தங்களுடைய தொழிலை நடத்தி வருகின்ற வகையில், கதர், கிராமக் கைத்தொழில் வாரியம் ஒரு ஆண்டிற்கு கிட்டத்தட்ட 25 லட்சம் கடனுகவும், மானியமாகவும் வழங்கி, இந்தத் தொழிலிலே ஈடுபட்டிருக்கின்றவர்களுக்குப் பாதுகாப்பு அளித்து வருகிறது. அதன் மூலமாக பனை பொருள்களான வெல்லம், கருப்பட்டி போன்றவைகளைத் தயாரிக்கிருர்கள். அதேபோல், இன்றைக்கு நாம் 'பாம் கோலா' என்ற ஒரு வகைப் பானத்தையும் தயாரித்து வருகிருேம். பனை நாரிலிருந்து பல பொருள்கள் தயாரிக்கப்பட்டு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக் கூடிய அளவிற்கு இன்றைக்கு இந்தத் தொழில் வளர்ச்சி அடைந் திருக்கிறது. அந்தத் தொழிலாளர்களைக் காப்பாற்ற பல வகைத் தொழிலும், தொடர்ந்து அவர்களுக்கு வேலை கிடைக்க அரசாங்கம் உதவியும் செய்து, அந்தத் தொழில் காப்பாற்றப்பட்டு வருகிறது. எனவே, இந்தத் தொழில் தொடர்ந்து நடைபெறுவதிலே எவ்வித மான சிக்கலும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு:—ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப் பெற்றிருந்தால் அது உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]